27590

# இன்பாச
# ஒப்பாரி



19286

A. பாபு அவர்களால் பதிப்பிக்கப் பட்டது.

உ

கடவுள் துணே.

ஜெகமெங்கும் புகழ்பெற்ற இன்பமான கீதமணி
திருசிறபுரம் ஸ்ரீமான் R. T. தங்கமுத்துதாஸ் அவர்கள்
இயற்றிய

# இன்பரச ஒப்பாரி

வெண்பா.

அம்பிகையாள் மனமகிழும்
ஆதி புதல்வா இத்தறி
இன்பரச ஒப்பாரி இயம்புதற்கு
தும்பிமுகனே துணேபுரிவாய்
நின்பதமே நம்பினேன் எனதருள்புரிவாய்

சாமிசங்குமுழங்கும் என்னைப்பெற்ற அப்பா
நான்வாழும்வாசலிலே சந்திரன்ஒளிவீசும்
அந்தசந்திரன் வெளிச்சத்திலே
இங்கேஜாதிமல்லிபூ பூர்க்கும்
அந்தஜாதிமல்லி பூவெடுத்து நீபெற்றபெண்ணாள்
நான்சரந்தொடுத்து மாலேகட்டி
எனக்கு சரடுகம்மல் மாட்டவிட்டு
நான்ஜாதிவர்ணப் பட்டுடுத்தி
உனக்குசந்தண நிரக்கோடி
சரணமிட்டு நானெடுத்து
குங்கும நிறக்கோடி
குளித்துகையில் நானெடுத்து
இஞ்சிவர்ணக்கோடி என்னைப்பெற்ற அப்பா
எடுத்துகையிலே பிடித்து
இன்னேக்கி ஜயகண்டி ஓசையிட
சகலஜனம் கூடிவர

உன்னுடையசவமிருக்கும் வாசலுக்கு
என்னைக்கொண்ட சந்திரரும்நானும்
சட்டெனவே வந்தாலும் உன்னுடையசவம்
பார்க்க கிட்டலியே நான்பாவி
உனக்குக் கொண்டுவந்த சந்தணநிறக்கோடி
உன்னுடைய சவத்துக்கு போத்தலியே
அம்மன்சங்குமுழங்க என்னைபெற்ற அப்பா
நான்வாழும் வாசலிலே ஆகாயம்ஒளிவீச
அந்தஆகாய வெளிச்சத்திலே
ஒருஅடுக்குமல்லிபூ பூர்க்கும்
நான் அடுக்குமல்லி பூவெடுத்து
அடியாமலொரு மாலைகட்டி
ஐந்துவர்ணப்பட்டுடுத்தி நீபெற்றபெண்ணாள்
அரக்குவர்ணக்கோடி அன்பாக நானெடுத்து
மஞ்சவர்ணக்கோடி என்னைப்பெற்ற அப்பா
மதிப்பாக நானெடுத்து
பஞ்சவர்ணக்கோடி என்னைப்பெற்ற அப்பா
பக்குவமாய் நானெடுத்து
அலரிதம்பூர் ஓசையிட
அநேகஜனங்கூடிவர உன் அங்கமிருக்கும்வாசல்
என்னைக்கொண்ட அர்ச்சுனரும் நானும்
அவசரமாய் வந்தாலும்
உன்னுடைய அங்கம் பார்க்கக்கிட்டலியே
என்னை எடுத்துவளர்த்த இன்பமுள்ள அப்பா
நான்பாவி கொண்டுவந்த
அரக்குவர்ணக்கோடி என் அருமை அப்பா
உன் அங்கத்துக்கு போத்தலியே
கள்ளர்மலைதாண்டி கழுகுமலை சந்திலே
கந்தனிருக்குமிடம் கானவள்ளி தூங்குமிடம்

கதம்பமலருமிடம் என்னைப்பெற்ற அப்பா
ஒருகதலி பழுத்திருக்கும்
கந்தனிடத்திலே நீங்கள் கைலாயம்போன
காரணத்தைச்சொல்லி நீபெற்றசெல்வி
நான்கதரி அழுதேனென்றால் இன்னக்கி
கதலிபழம் தின்கவரும்
கருங்குருவி பட்சியெல்லாம்
நான்கதரும் குறைகேட்டு
கதலிபழம் தின்னமல் என்னைப்பெற்ற அப்பா
இப்போகண்ணீர் விடுகுதையா
ஆனைமலைதாண்டி அழகுமலைசந்திலே
ஐவரிருக்குமிடம் அம்பா ஞறங்குமிடம்
அரும்பு மலருமிடம் ஒருஅத்தி பழுக்குமிடம்
அந்தஐவரிடத்திலே என்னைப்பெற்ற அப்பா
நீங்கள் அறனுலகுபோற
அவதிதனைச் சொல்லிவிட்டால்
அத்திப்பழம்தின்னவந்த அன்னம்புருபட்சியெல்லாம்
நான் அலரும் குறைகேட்டு
அத்திபழம்தின்னமல் என்னைப்பெற்ற அப்பா
இப்போஅழுது புலம்புதையா

## தாயாருக்குப் புலம்பல்

நாலுகடலிலே நடுக்கடலின் மத்தியிலே
அங்கநன்றாய் விளைந்திருக்கும்
என்னைப்பெற்ற தாயே
நான்நல்லமுத்து வேண்டுமென்றால்
நம்மநாட்டிலுள்ள காவலரால்நல்ல முத்துதேடி
நீபெற்றநங்கைக் கனுப்பிடுவாய்
உங்கள்கண்ணு மறைந்தவுடனே
என்னைப்பெற்ற அம்மா

நல்லமுத்து கிட்டலியே
நான்பாவி நங்கைபுலம்புரது
நீபோகும் நமனுலகு சம்மதமோ
ஐந்துகடலிலே அலைகடலின் மத்தியிலே
என்னைப்பெற்ற தாயே அங்கே
அழகாய் விளைந்திருக்கும்
ஆணிமுத்து வேண்டுமென்ருல்
நீ ஆளை அனுப்பி ஆணிமுத்துதேடி
நீபெற்ற அல்லிக் கனுப்பிடுவாய்
உங்கள் கண் மறைந்தவுடனே
என்னைப் பெற்றதாயே
எனக்கு ஆணிமுத்து கிட்டலியே
நான் அழுதுபுலம்புரது நீபோகும்
அறனுலகு சம்மதமோ
சித்திரைமாதத்தில் என்னைப்பெற்றதாயே
நான் உங்க வாசலவந்து
சீறுவேண்டுமென்று சொன்னல்
சிங்கப்பூர்சீட்டியிலே சில தினுசுவந்திரங்கும்
வங்காளம்சீட்டி என்னைப்பெற்ற அம்மா
வகைவகையாய் வந்திரங்கும்
பம்பாய்பட்டு சீட்டியிலே பலதினுசுவந்திரங்கும்
உங்கள்கண் மறைந்தவுடனே
சீறுகளை நானிழந்தேன்
சீட்டிகளை நான்மறந்தேன்
உங்கள்வாசல் வந்துநின்று
என்னைப்பெற்றதாயே நான்சிதரிமயங்குரேனே
வைகாசிமாதத்திலே என்னைப்பெற்றதாயே
நான்உன்னுடைய வாசல்வந்து
நான் வரிசைவேண்டு மென்றுசொன்னல்

வடகாசிபட்டு வகைவகையாய் வந்திறங்கும்
தென்காசிபட்டு தினுசுக்கொன்ருய் வந்திறங்கும்
கல்கத்தாபட்டு கணக்காக வந்திறங்கும்
உங்கள்கண் ணு மறைந்தவுடனே
வடகாசிபட்டு வரிசைகளை நானிழந்து
நான் பாவிஇப்போ வயிரெறிந்து நிற்கிறேனே

## புருஷனுக்குப் புலம்பல்.

பத்துசுத்து கல்கோட்டை என்னைதேடியசாமி
ஒருபவளமணி மண்டபமே
அந்த பவளமணி மண்டபத்தில்
ஒருபவுனிழைத்த ஊஞ்சலிட்டு நம்பயிருபேரும்
பக்குவமாய்குந்தி பாசிவிளையாடையிலே
அந்தப்பட்டணத்து தேவடியாள்
என்னைதேடிய மன்னவரே
பார்த்து அழைத்தாளோ பதில்லட்டர் தந்தாளோ
பதில்லட்டர் கண்டவுடன்
பட்டிணத்துதாசிவீடு பக்குவமாய் போனீர்களோ
அந்தப்பட்டிணத்து தாசியோடே என்னைத்தேடிய
நீங்கள் படுத்துறங்கும் வேளையிலே [சாமி
அந்தப் படுபாவி வேசியரை
ஒருபாம்பு பிருந்து தீண்டாதோ
அவள் பரமலோகம் சேராளோ
என்னைக்கொண்ட மன்னவரே
நான்பாவி வாசலுக்கு நீங்கள்
படுத்துறங்க வாரதெப்போ
ஐந்துசுத்துக் கல்கோட்டை நம்வாசலிலே
என்னை தேடியசாமி
ஒரு அழகுமணி மண்டபமே

அந்த அழகுமணி மண்டபத்தில்
ஒருஅரும்பவுன் ஊஞ்சலிட்டு நம்பயிருபேரும்
அழகான சொக்கட்டானடி விளையாடையிலே
உங்களை அரந்தாங்கி தேவடியாள்
அன்போடழைத்தாளோ
அவள் அட்ரஸும் தந்தாளோ
அந்த அட்ரஸைக் கண்டவுடன்
அரந்தாங்கி தாசிவீடு அவசரமாய் போனீர்களோ
அந்த அரந்தாங்கி தாசியோடு
ஆடி விளையாடையிலே அந்த ஆகாதவேசியரை
ஒரு அரவமங்கே தீண்டாதோ
அவள் வானுலகம் போகாளோ
நான் பா[illegible]வாசல் நீங்கள்
அன்னம்போல வாரதெப்போ
சன்[illegible]த்துக் கல்கோட்டை
என்னைத்[illegible]ன்னவரே நம்மவாசல்
ஒருசலங்கைமணி மண்டபமே
அந்த சலங்கைமணி மண்டபத்தில்
ஒருஜாதிமல்லி ஊஞ்சலிட்டு
நம்மிருபேரும் சதுரங்க மாடையிலே
உங்களை சமயபுரம் தேவடியாள்
ஜாடையாய் அழைத்தாளோ
சரசலட்டர் தந்தாளோ
அந்த சரசலட்டர் கண்டவுடன்
சமயபுரம் தாசிவீடு நீங்கள் சைக்கலில் போயிரங்கி
நீங்களிருபேரும் ஜலத்தில் விளையாடையிலே
அந்தசதிகாரி வேசியரை
ஒருசர்ப்பம் அங்கே தீண்டாதோ
அவள்சாமி பதம்சேராளோ

என்னைத்தேடியசாமி நான் பாவிவாசல்
நீங்கள் சந்தோஷமாய் வாரதெப்போ
சின்னசுத்துக் கல்கோட்டை
ஒருசிகப்பிழைத்த மண்டபத்தில்
அந்தச் சிகப்பிழைத்த மண்டபத்தில்
என்னைத்தேடியசாமி ஒருசிவந்தியப்பூ ஊஞ்சலிட்டு
நம்பளிருபேரும் சிரித்து விளையாடையிலே
சீரங்கம் தேவடியாள்
உங்களைசிமிட்டி அழைத்தாளோ
சேதிலட்டர் தந்தாளோ
அந்த சேதிலட்டர் கண்டவுடன்
சீரங்கம் தாசிவீடு சீக்கிரமாய் போனீர்களோ
அந்த ஜெகஜால தாசியோடு
நீங்கள் சீட்டு விளையாடையிலே
அந்தசீரங்கம் வேசியரை
ஒரு சிறுநாகம் தீண்டாதோ
அவள் சிவன்பதம் சேராளோ நான்பாவிவாசல்
சீக்கிரமாய் வாரதெப்போ
சிகப்பு யிரும்புபெட்டி நான்பாவி
சீலைவைக்கும் ட்ரங்குபெட்டி
நான் சிறுவயதில் அறுத்தவள் சீமானைத்தோற்றவள்
வயதில் அறுத்தவள் என்னைக்கொண்ட
வல்லவரை தோற்றவள்
சிகப்புயிரும்பு பெட்டியிடம்
சேலைவைக்கும் ட்ரங்கினிடம்
நான்பாவி செல்விகுறை சொல்லிவிட்டால்
இன்றைக்குசேலை அழுகலாச்சோ
இப்போ சிகப்புயிரும்பு மங்கலாச்சோ
பச்சை யிரும்புபெட்டி என்னைத்தேடியசாமி

நான்பாவி பவுனுவைக்கும் ட்ரங்குபெட்டி
நான்பாவி யறுத்தவள் என்னைக்கொண்ட
பாண்டியரை தோத்தவள் தாலியறுத்தவள்
என்னுடையதருமரைத் தோற்றவள்
பச்சையிரும்பு பெட்டியிடம்
பவுனைவைக்கும் ட்ரங்கினிடம்
நான்பாவிகுறை சொல்லிவிட்டால்
இப்போபவுனு அழுகலாச்சோ
பச்சையிரும்பு மங்கலாச்சோ

## சகோதரருக்குப் புலம்பல்

தங்கக்குடைபிடித்துதகுந்த கம்பிவேஷ்டிகட்டி
நான்பாவிவாசல் நீதைமாதம்வந்தாலும்
என்னுடையதம்பி வாரானென்று
தாவியழைத்திடுவேன் என்னைக்கொண்ட
தருமருக்குச் சொல்லிடுவேன்
இப்போதம்பியைக் காணாமல்
தவித்து புலம்பலாச்சே
என்னுடையதருமர்மனம் நோகலாச்சோ
பொன்னாலும் குடைபிடித்து என்னுடன்பிறந்ததம்பி
நீபுதுக்கம்பிவேஷ்டிகட்டி நான்பாவிவாசல்
புரட்டாசிமாதம் வந்தால்
என்னுடையபிறப்பு வாறானென்று
நான்போற்றி யழைத்திடுவேன்
என்னுடைய புண்ணியற்கே சொல்லிடுவேன்
என்னுடைய பிறப்பையிப்போ காணாமல்
நான்புலம்பி யழுகலாச்சே
என்னுடைய புண்ணியரும் நோகலாச்சே

முற்றிற்று.

---

V. Press, Madras.

**வில்லிபாரத வசனம்** அல்லது

**மகா பாரத வசன சங்கிரகம்** விலை ரூ. 3

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

பாரதம் ஆதிமுதல் அந்தம் வரையில் இடையில் எவ்வித உபகதையும் விடாமல் படிக்கத் தெள்ளிய தமிழ் வசன நடையில் தமிழ்ப் பண்டிதரும், 'கம்ப நாடர்' ஆசிரியருமான மோ. வே. கோவிந்தராஜ அய்யங்காரவர்களால் புதிய முறையில் எழுதப்பட்டுள்ளது. அநேக அழகிய ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு நூதன முறையில் வெகு அழகான காலிகோ கட்டடம் செய்யப்பட்டிருக்கிறது. வாசகசாலைக்கும், பரிசளிப்பதற்கும் இன்றியமையாதது.

**பிரபஞ்ச விநோதக் கதைகள்** விலை ரூ. 1

படிக்கப் படிக்க இனிமை அளிப்பது. இப்பிரபஞ்சத்தில் நடக்கும் அதி விநோதமான செய்கைகள் பலவும் விளக்கப்பட்டிருப்பது. அதி உன்னதப்போக்கு. அழகிய கதைகள்.

இதில் அடங்கியுள்ள கதைகளாவன:—

1. பந்தயத்தால் மனைவியை இழந்தது 2. பெண்ணால் மோசம்போன சாஸ்திரி 3. முகஸ்துதியால் ஏமாந்த கோடீசுவரன் 4. ஐந்து சகோதரிகளின் தந்திரம் 5. மூன்று காதலர் காதலிகளின் பரிதாபம் 6. வஞ்சகன் வலையில் மடமான் 7. ஒரு காதல் கலியாணத்தின் நேர்மை 8. காதல் வேட்டை 9. செல்வியின் தந்திரம் 10. காமுகனுக்குப் படிப்பினை.

தமிழ் புத்தகங்கள் முற்றுமடங்கிய விலை விவர ஜாபிதா வேண்டுபவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

**ஆர். ஜி. பதி அண்டு கம்பெனி,**

நெ. 4, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி. சென்னை.


226